1979 அக்டோபர் 30]

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : இச்சட்ட முன்வடிவுவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(ஏ) ஊராட்சிகள் (மூன்றாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1979.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, ‘‘தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (மூன்றாவது திருத்த) சட்ட முன்வடிவை’’ பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : இச்சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

(ஏ) தொழில் தகராறுகள் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு, 1979.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, ‘‘1979 ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவை’’ பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

திரு. க. சுப்பு : தலைவரவர்களே, ஒரு அப்ஜெக்ஷன். அது டெக்னிக்கல் பாயின்ட். ஒரு ஆர்டினன்சை ரீபிளேஸ் செய்வதற்காக இந்த பில்லை கொண்டு வந்திருக்கிறார்கள். இதற்கு முன்னால் ஒரு ஆர்டினன்ஸ் போட்டிருக்கிறார்கள். அதைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லை. அதை ரீபிளேஸ் பண்ணவில்லை. அப்படியானால் அதற்கு என்ன அர்த்தம்? அது அப்படியே லாப்ஸ் ஆகிவிட்டதா ? அது என்னவாயிற்று என்று தெரியாமலேயே இரண்டாவது ஆர்டினன்சுக்காக இந்த பில்லை இன்ட்ரொடியூஸ் செய்வது சரிதானா ? இது தேவையா? இதில்

உள்ள சரக்கே மோசமாக இருக்கிறது. முதல் ஆர்டினன்சை ரீபிளேஸ் செய்யாமல் இரண்டாவது ஆர்டினன்சைரீ பிளேஸ் செய்வது சரிதானா? இது தேவையில்லாதது.

திரு. கு. ரமணி: தலைவரவர்களே, அரசாங்கம் கொண்டு வந்திருக்கக் கூடிய இந்த திருத்தச் சட்ட முன்வடிவு தொழிலாளர்களது அடிப்படை உரிமையான ஸ்டிரைக் உரிமையைப் பறிக்கிறது. அந்த சரத்து இதில் இருக்கிறது. தொழிலாளர்களையும் தொழில் அதிபர்களையும் கேட்டுக்கொள்வது என்று வார்த்தைகள் இருந்தாலும் அரசாங்கம் ஸ்டிரைக்கை தடை செய்திருக்கிறது. ஆகவே, இது தேவையில்லாத ஒரு சட்டம்.

மேலும் தமிழ் நாட்டில் தொழிலாளர் பற்றிய சட்டங்கள் சம்பந்தமாக ஆலோசனை வழங்க ஒரு கமிட்டியை அரசாங்கம் நியமித்திருக்கிறது. அந்த ஆலோசனைக் குழுவுக்கு முன்னால் கூட இந்தச் சட்டத்தைக் கொண்டு வருவதுபற்றி எந்தவிதமான தகவலையும் தெரிவித்தது கிடையாது. இந்தமுறை சரியல்ல. ஆகவே, இதை அறிமுகம் செய்வதை எதிர்க்கிறேன்.

திரு. மு. அம்பிகாபதி: தலைவரவர்களே, தொழிலாளர்களுடைய வேலை நிறுத்த உரிமையை தடுக்கின்ற முறையில் இந்த சட்ட முன்வடிவு இருக்கிறது. முன்னால் இருந்த சட்டம் என்னவாயிற்று என்று தெரியாத போது தொழிலாளர்கள் உரிமையைப் பறிக்கிற இத்தகைய சட்டத்தை இந்த அவையில் பிரேரேபித்திருப்பது வருந்தத் தக்கது; கண்டிக்கத்தக்கது, இதை முன்மொழிந்து இருப்பதை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில்ன் நான் வன்மையாக எதிர்க்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*திரு ஏ. ஆர். மாரிமுத்து: தலைவரவர்களே, இந்த மசோதாவை தொழிலாளர் நலன் கருதி, நாங்கள் எதிர்க்கிறோம். இந்த மசோதா சட்டமாக ஆக்கப்படுமானால் தொழிலாளர்களுக்கு இருக்கின்ற 'கலெக்டிவ் பார்செயின்' என்ற சக்தி குறைந்துபோய்விடும். இந்தச் சட்டத்தின் மூலம் முதலாளிகளுக்கு அதிக பலம், அவர்கள் விட்டுக்கொடுக்காத நிலை ஏற்படும். ஆகவே, அவர்கள் இருக்கின்ற இடத்தைவிட்டு அசைய மாட்டார்கள், கடினமாக நடந்துகொள்வார்கள். 100 ரூபாய் போனஸ் கேட்டால் 5 ரூபாய் கொடுத்தால்கூட போதும் என்பார்கள். அரசாங்கமே இதில் முடிவு செய்யும். அப்படியானால் அரசாங்கம் விரும்பாத ஒரு தொழிற் சங்கத்தை முறியடிக்கலாம்; அரசாங்கம் விரும்புகின்ற தொழிற்சங்கத்தை ஊக்குவித்து, வளர்க்கலாம் என்ற ஒரு நிலையை இச்சட்டம் உருவாக்கிவிடும். அதோடுகூட முதலாளிகளுக்கும் விட்டுக் கொடுக்காத மனப்பான்மையை ஏற்படுத்துகிறது. ஆகவே, இந்தச் சட்டத்தை முதல் கட்டத்திலேயே நாங்கள் எதிர்க்கிறோம்.

1979 அக்டோபர் 30]

(முற்பகல் 9—10)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏதாவது சொல்லவேண்டியிருந்தால் சொல்லலாம்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : விவாதம் வரும்போது சொல்கிறேன்.

This is only an amendment to the existing Industrial Disputes Act –an addition to the I.D.Act – Section 10(b) அவ்வளவுதான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி : "1979 ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் (தமிழ் நாடு திருத்த) சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : சட்ட முன் வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

(2) தகவல் கோரல்

காவலர்களது போராட்டம் குறித்து.

திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அமைச்சரவை யின் கொள்கையைக் கண்டிக்கிற தீர்மானம் இங்கே மொழியப் பட்டு விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. நான் தங்களுடைய மேலான கவனத்திற்கு ஒன்றைக் கொண்டுவர விரும்புகிறேன். 26-ம் தேதி நடைபெற்ற அலுவல் ஆய்வுக் குழுவில் தாங்களும், அவை முன்னவர் அவர்களும், மின்சாரத் துறை அமைச்சர் அவர்களும், மற்றும் எதிர்க்கட்சித் தலைவர்களும் கூடி கலந்து பேசி 27, 29, 30 ஆகிய இந்த மூன்று நாட்களுக்குள் இந்தக் கண்டனத் தீர்மானத்தின் மீதான விவாதத்தை முடித்துவிட்டு அதற்குரிய பதிலை முதல் அமைச்சர் அவர்கள் சொல்வார்கள், அதன் பிறகு கண்டனத் தீர்மானம் பற்றிய முடிவு, வோட்டெடுப்புகள் நடைபெறும் என்றளவில் தான் அன்று நாம் பேசி முடித்தோம். அலுவல் ஆய்வுக் குழுவில் எங்களுக்கிருக்கிற சங்கடமெல்லாம்— எங்களுக்கு மாத்திரமல்ல, உங்களுக்கும் கூடத்தான், அவை முன்னவர் அவர்களுக்கும் கூட இருப்பதாக